DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. No. 205/ 2025 |
| List of witness | : | LW–1 |
| Deposition of witness | : | PW–1 |
| Name | : | செந்தில்குமார் |
| Father's /Husband Name | : | கலிமூர்த்தி |
| Village | : | சுக்கிரவாரக்கட்டளை |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 47 |
| Occupation | : | ஆட்டோ ஓட்டுனர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day February 2026.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் நன்னிலம் தாலுக்கா ஸ்ரீவாஞ்சியம் சுக்கிரவாரக்கட்டளையில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். நான் சொந்தமாக ஆட்டோ வைத்து ஓட்டுகிறேன். ஆஜர் எதிரி சங்கர் எனது தம்பி நானும், எனது தம்பியில் எங்கள் ஊரில் அருகருகே வீட்டில் வசித்து வருகிறோம். எங்கள் அப்பா இறந்தபிறகு எனது அப்பா அவரது சொத்துக்களை எல்லாம் எனது தப்பி பெயருக்கு உயில் எழுதியுள்ளார் என்ற விபரம் தெரியவந்தது. அது சம்பந்தமாக மாண்புமிகு நன்னிலம் நீதிமன்றத்தில் எனது தம்பிக்கு எழுதிவைத்த உயில் மோசடியானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த அசல் வழக்கானது மாண்புமிகு சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எங்கள் இருவர் வீட்டிற்கும் ஒரே கனெக்சனில் தான் மின்சாரத்தை பயன்படுத்தி வருகிறோம் என்ற நிலையில் என் வீட்டிற்கு வந்த மின் இணைப்பை எனது தம்பி துண்டித்துவிட்டார். மேலும், நான் எனது வீட்டிற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்து மின்சார வாரியத்தில் புதியதாக மின் இணைப்பு பெற வேண்டி மனு தாக்கல் செய்திருந்தேன். அதற்கும் எனது தம்பி தடங்கள் மனு கொடுத்து அதை நிறுத்திவிட்டார். அதனால் நான் எனது வீட்டு வாசலில் சோலார் இணைப்பை ரூ.90,000/–ம் செலவு செய்து அதன்மூலமாக எனது வீட்டிற்கு மின்சாரத்தை பயன்படுத்திக்கொண்டிருந்தேன். நான் வைத்திருந்த சோலார் இணைப்பை 2024–ம் வருடம் 10–வது மாதம் தற்போது தேதி எனக்கு நினைவில்லை. நான் சவாரிக்காக வெளியே சென்றிருந்தேன் அப்போது எனது தம்பி சங்கர் அலக்கு அருவாளால் சோலார் பேனல் ஒயர்களை அறுத்து சேதப்படுத்திவிட்டார் அதனால் எனக்கு மின்சாரம் வசதி இல்லாமல் இருந்து வருகிறேன். மேற்படி எனது தம்பி சங்கர் அலக்கு அருவாளால் சோலார் பேனல் ஒயர்களை சேதப்படுத்தியதன் மதிப்பு ரூ.26,500/– ஆகும். இதுசம்பந்தமாக நான் நன்னிலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதன்பிறகு

போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தந்தை 2020–ம் ஆண்டு இறந்தார். 2020–ம் ஆண்டு நான் எந்த முகவரியில் வசித்து வந்தேன் என்றால் சுக்கிரவாரக்கட்டளையில் வசித்தேன். எனது தந்தை எழுதியுள்ள உயிலில் நான் வேறு இடத்தில் வசிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலில் கூறியுள்ளதுபோல் நான் வேறு இடத்தில் குடியிருந்தேன் என்றால் சரிதான். எனது உடன்பிறந்த சகோதரிகள் இரண்டு பேர், சகோதரர் ஒருவர் ஆஜர் எதிரி ஆவார். மேற்படி சகோதர சகோதரிகள் நான்கு பேரும் திருமணமாக தனித்தனியாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தந்தை காரியத்தின்போது தான் உயில் எழுதி வைத்த விபரம் தெரிவந்தது என்றால் சரிதான். அந்த உயிலில் கண்டுள்ளவாறு வைப்பீடு தொகையை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். உயிலுக்கு பிறகு தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கு ஆதரவாக எனது தந்தை எழுதி வைத்த உயில் பிடிக்காத காரணத்தினால் அசல் வழக்கையும், இந்த வழக்கையும் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. சோலார் வைத்ததற்கான ரசீதுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யாமல் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக எனது மனைவி போன் செய்து தகவல் கூறினார் என்றால் சரிதான். எனது மனைவி சம்பவம் தொடர்பாக தெரிவித்த தேதி என்னவென்றால் 10–வது மாதம் 2024–ம் வருடம் தேதி குறிப்பாக நினைவில்லை. எதிரிக்கு உயிலில் அளிக்கப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் எத்தனை ஒயர்கள் அறுபட்டு கிடந்தது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை சோலார் பேனை பயன்படுத்தி வருகிறேன் என்று புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். நான் எதிரியிடமிருந்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.